776

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாதாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-ஞு ஜனவரிமீ [நெ. 1.

MONTHLY JOURNL OF 8 PAGES.

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

கும்பகோணம் மகம்.

நீலத்தநல்லூரில் கால்நடைச் சந்தை.

(கும்பகோணம் தாலூகா போர்டு விசாரணை)

20—2—1918 முதல் **9—3—18** முடிய நடக்கும்.

நோட்டீஸ்.

1. இரண்டு வருஷகாலமாக கும்பகோணம் டவுனிலிருந்து நேர் வடக்கே போகும் கப்பிரோட்டில் 4-மயிலிலுள்ள நீலத்தநல்லூரில் கால்நடைச்சந்தை நடந்துவருகிறதென்று எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம்.

2. மேற்படி சந்தை 1918-ஞு பிப்ரவரிமீ 20உ முதல் 1918-ஞு மார்ச்சுமீ 9உ முடிய நடைபெறும். அப்போது ஸகல வித கால்நடைகளும் அச்சந்தைக்கு வரும்.

3. சுகாதாரவிஷயங்களும், குடிதண்ணீருக்காக குழாய் கிணறும் கால்நடைகள் கட்ட இடங்களும், வியாபாரிகள் வாங்குவோர்களுக்கு வசதிகளும், வெகு சௌக்கியமாக ஏற்பாடு செய்யப்படும்.

4. ஷெ சந்தையில் பின்வருமாறு கட்டணம் (பீஸ்) வசூலிக்கப்படும்:—

		சந்தைக்குள் வந்ததற்கு ரூ. அ. பை.
1.	சந்தைக்குள் கொண்டுவரப்படும் ஒவ்வொருமாட்டிற்கும் (Cattle)	0—8—0
2.	ஆடு, வெள்ளாடு, பன்றி	0—0—6
3.	குதிரை, மட்டக்குதிரை	0—4—0
4.	கோழி	0—0—4

5. இன்னும் மற்ற விபரங்கள் கும்பகோணம் தாலூகா போர்டு பிரஸிடெண்டு அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

Taluk Board Office, Kumbakonam. 12th December 1917.

C. R. Lakshmivaraha Ayyangar,
President.

கும்பகோணம் விடர்னரி ஆஸ்பத்திரி.

போர்டா[illegible]வின் ஹாலுக்குவடபுறமாககிழக்கேபோகும்ரஸ்தாவில் ஒரு ஆஸ்பத்திரி விவசாயிகளுடைய கால்நடைகளை வியாதியினின்று சம்ரக்ஷிக்கும் பொருட்டு வைக்கப்பட்டிருப்பதை நமது சங்கமெம்பர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம். மிருகசிகிச்சைக்காக நம்ஜில்லாவில் திருவாரூரில் ஒன்றுதான் ஏற்பட்டுளது. அது எல்லோருடைய உதவிக்கும் ஒரேசமயத்தில் பிரயோஜனம் உண்டாவதற்கில்லை. ஆகையால், நம் கவர்ன்மெண்டார் தாராள நோக்கத்துடன் இதை மிருகசிகிச்சைக்காக உதவி இருக்கிறார்கள். சென்ற ஜனவரிமீ 23உ புதன்கிழமை நம் சங்கத்தின் உப அக்கிராசனாதிபதி ஆன்ரபிள் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

நெல் பயிர்.

விதையினளவு.

ஒரு ஏகர் நிலத்தில் நாற்றுகள் நட 30 பட்டணம்படிமுதல் 60 பட்டணம்படி வரையில், ஒவ்வோர் இடத்திலும் வேறுபட்டு, நாற்றங்காலில் விதைகள் தெளிக்கப்படுகின்றன. இவ்வளவு ஜாஸ்தியான விதைச்செலவின் காரணம் ஒவ்வொரு நடவிலும் ஆறுமுதல் பதினைந்து அல்லது இருபதுவரை நாற்றுகள் சேர்த்து நடப்படுவதினாலேயாம். இதனால் அனாவசிய விதைச் செலவே. கிருஷ்ணா ஜில்லாவில் ஒரு ஏகர் நடுவதற்கு 5 அல்லது 6 பட்டணம்படி விதையே போதுமானதாயிருப்பதின் காரணம் ஒவ்வொரு நடவிலும் ஒவ்வொரு நாற்றுநடுவதனாலேயேயாம். ஸ்பெயின் தேசத்தில் ஒவ்வொரு நடவிலும் 3 முதல் 5 வரை நாற்றுகள் சேர்த்து நடுகின்றனர். சென்னை விவசாய டிபார்ட்மெண்டார் முயற்சியினால் ஒற்றை அலகாக நடுவதினாலுண்டாகும் பிரயோஜனங்களைக் குடிகளறிந்து ஆயிரக்கணக்கான நிலங்களில் இப்போது இம்மாதிரி நட்டுவருகின்றனர். சம்பா, பிசானம் நெல் தினுசுகளெல்லாம் ஒற்றை முதல் நடுகை நட்டால் நல்ல மேனிதரும். கிளைக்கும் குணத்திற்காக, தகுந்த எரு, நிலவளம், பயிரின் வயது இவைகளை யநுசரித்து ஒன்று முதல் நான்கு வரையில் நாற்றுகள் சேர்த்து நடத்தப்படுகின்றன. இவைகளையநுசரித்தே நடுவு தூரமும் குறிப்பது மேன்மை. ஒரு பவுண்டு நிறையில் சுமார் 17000 நெல்விதைகள் இருக்கின்றன. ஒவ்வொரு விதையும் முளைப்பதாகக் கொண்டால், அடியில்கண்ட அளவு நெல் விதை ஒரு ஏகர் நடுவதற்கு செல்லும்.

நடவின் தூரம் அங்குலம்.	ஒரு ஏகருக்கு வேண்டிய நாற்று	உத்தேசமாய் பிடிக்கும் விதை பவுண்டு.	வாஸ்தவத்தில் பிடிக்கும் விதை பவுண்டு.
12	43560	2½	5
9	77440	4½	9
6	174240	10	20
3	696960	40	80

(ஒவ்வொரு விதையும் முளைக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே பாதிதான் முளைக்கலாம் எனக்கருதி வாஸ்தவத்தில் பிடிக்கும் விதையினளவு இரட்டிப்பாகக் காட்டப்பட்டிருக்கின்றன.)

இரண்டு நாற்றுகளாக நட்டால் இரட்டிப்பாகவும் மூன்று நாற்றுகளாக நட்டால் மூன்று மடங்காகவும் விதையினளவு செல்லும். ஒரு பட்டணம்படி நெல் 2½ பவுண்டு கனமிருக்கும் நாற்றின் எண்ணிக்கை ஒவ்வொரு அலகுக்கும் அதிகமாக, நடவின் தூரமும் அதிகமாகிறது. எப்படியிருப்பினும் நடவுதூரம் 12-அங்குலத்திற்கு மேற்படுகிறதில்லை.

விதைப்பு.

புழுதியில் விதையை சாதாரணமாய்த் தெளிப்பார்கள். இதற்கு வாவிதையென்று சொல்லலாம். சேற்றில் தெளிப்பதாகயிருந்தால முளைகட்டியே விதைக்கிறார்கள். இதில் முளைகண்டும் காணாததுமாயிருத்தல்வேண்டும். அதிகமாய் முளை வளர்ந்திருந்தால் எடுப்பதிலும் அது முறிந்துபோகும். காயவைத்த விதைகளை கோட்டைகட்டி வைப்பார்கள். கோணிப்பைகளில் கட்டி வைத்திருப்பதுமுண்டு. அப்படி கட்டிவைத்திருக்கும் விதைநெல்லை கோட்டையோடோ அல்லது கோணிப்பையோடோ ஜலத்தில் ஊறவைப்பார்கள் அப்படிச் செய்ததில் இறுகக் கட்டப்பட்டிருக்கும் நெல் ஊறிப் பருமனுகி மேல்போக இடமில்லாததால் அதிக பிகுவாகி சீக்கிரத்தில் முளை கிளம்புகிறது. முளைகட்டிய விதையை இரண்டாங்கொப்பில் தெளிப்பதுதான் உத்தமம்.

முதல் நாள் மாலையில் விதைக் கோட்டையை ஜலத்தில் ஊறவைப்பார்கள். இரவு முழுவதும் அப்படியே ஜலத்தில் வைத்திருந்து காலையில் அதை வெளியே எடுத்துத் தரையில் வைத்து ஜலத்தை வடியவிடுவார்கள், சாயந்திரம் வரை ஜலம் வடிந்து கொண்டிருக்க விடுவார்கள், பின்பு அதை எடுத்துக்கொண்டு

போய் கட்டையவிழ்த்து விதைகளைத் தெளிப்பார்கள். இதற்குத் தான் இரண்டாங்கொமமென்று சொல்கின்றனர்.

மூன்றுங் கொம்மென்பது காலையில் ஊறவைத்து, மாலையில் வெளியே எடுத்துவைத்து, ஒரு இரவு ஒரு முழுவதும் ஜலத்தை வடியவிட்டு விதையைத் தெளிப்பதற்கேயாம்.

சிவகிரிப் பக்கங்களில் விதைக் கோட்டையை காலையில் ஜலத்தில் ஊறவைத்து மாலைவரையில் அப்படியே வைத்திருந்து, அந்தி நேரத்தில் வெளியே எடுத்து இரவு முழுவதும் ஜலம் வடியும்படி விடுவார்கள். காலையில் கோட்டையை அவிழ்த்து காற்றுப்புகாத அறையில் குவித்து நனைந்த வைக்கோலினால் மேலே மூடி வைப்பார்கள். சாயந்கிரம் குவித்து வைத்திருக்கும் விதையைக் கிளறி சூடாகவிருக்கும் விதைகள் ஆறினதும் மறுபடியும் குவித்து வைத்திருந்தால் காலையில் முளைகள் கண்டு விதைக்கத் தகுந்தவைகளாகவிருக்கும். நனைத்த இரண்டாம் நாளில் விதைப்பதற்கு அனுகூலப்படுமாம்.

உப்புத் தண்ணீரின் உதவியால் நெல் விதை தெரிந்தெடுத்தல்:—ஜப்பானியர் உப்பு ஜலத்தில் விதைகளைக் கொட்டி அதில் மிதக்கும் விதைகளை உபயோகமற்றதென நீக்கிவிட்டு அமிழ்ந்த விதைகளை விதைத்து விடுவது வழக்கம். இதைப்பற்றி மைசூர் சர்க்கார் பண்ணையில் பரிக்ஷைகள் செய்து அதிகபலன் தருவதாக ஒப்புக்கொள்கின்றனர். 2 படி தண்ணீருக்கு 1 படி உப்பு வீதம், வேண்டிய ஜலத்தில், கரைத்துவிட்டபின் அதில் விதைக்கவேண்டிய விதைகளைக் கொட்டி கலக்கவேண்டியது சிறிது நேரத்திற்குள் கனமான விதைகள் தண்ணீரில் அமிழ்ந்து லேசான விதைகள் மேலே மிதக்கின்றன மிதப்பவைகளை வெளியே எடுத்துவிட்டு அமிழ்ந்திருக்கும் விதைகளை ஒன்றிரண்டு தடவை ஜலத்திலேயே கலக்குவது உத்தமம். ஏனெனில் விதையைக் கொட்டினதில், நல்ல விதைகளின் மத்தியில், லேசான விதைகள் கலந்திருந்தாலும், மேலே மிதந்துவரும். இப்படி மிதக்கும் விதைகளையெல்லாம் வெளியே எடுத்துவிடவேண்டும். பின்பு சல்லடையால் வடிகட்டி அந்த உப்புஜலத்தை மறுபடியும் உபயோகித்துக்கொள்ளலாம்.

நெல்விதைகளிலுள்ள மணிகள் முற்றி அரிசிக்கும் உமிக்கும் இடைவெளி யில்லாமலிருப்பதால் அதிக கனமுள்ளதாக யிருக்கிறது. அது ஜலத்தில் மிதக்கிறதில்லை. முற்றாத மணிகளாகயிருந்தால், அரிசிக்கும் உமிக்கும் இடையில் வெளியுண்டாகி அது தண்ணீரில் மிதக்கிறது. இவைகளை விதைத்தால் நாற்றுகள்

மெலிந்து நல்ல பலனைக்கொடுக்காது. அமிழ்ந்த விதைகளைமட்டும் எடுத்து சுத்தஜலம் விட்டுக் கழுவி விதைத்தால் நன்றாய்க் கிளைத்து தூருகட்டி நல்ல பலனைக்கொடுக்கும்.

விதைப்பும் தெளிப்பும்.

நெல் விதையைக் கையால் எடுத்து நிலமுழுவதும் வீசி அப்படியே வளரவிட்டு பலனையடைவது ஓர் வழக்கம நாற்றங்காலில் விதையை விதைத்து நாற்று உண்டாக்கி பின் நாற்றைப் பிடுங்கி பண் செய்யப்பட்ட நிலங்களில் நட்டுப் பயிரிடுவது மற்றோர் வழக்கம் நெல்லில் குறுகிய வயதுள்ள வகைகளை முதலில் சொன்னபிரகாரம் அநேகமாய்ப் பயிரிடுகின்றனர். இரண்டு முறைகளும் நமது நாட்டில் கையாடப்பட்டு வருகின்றன. என்றாலும் நாற்றை நட்டுப் பயிரிடுவதே லாபகரமாக விருப்பதாகக் கருதுகின்றனர். தெளிப்பில் அதிக அளவு விதை கொள்கிறது நாற்றங்காலில் நாற்றுவிட்டு நடுவதனால், விதையினளவு குறைந்தும், சிறிய விஸ்தீரணத்தில் அவைகள் வளர்வதால் சுலபமாய்ப் பாதுகாக்கக் கூடியதாகவு மிருக்கிறது நாற்றங்காலை உழுவதற்கும் நாற்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கும் அதிக ஜலம் வேண்டியதில்லை ஜலம் கிடைத்ததும் காலத்தை வீணாக்காமல், நாம் நடுவதற்காக வேண்டிய நாற்றுகளை கிணற்றிறைவையினாலாவது தயாரித்து வைத்துக்கொண்டிருக்கலாம். தெளிப்பினைவிட நடவுப்பயிர் பலன் தரத் தாமதமாகுமாதலால் ஜலம், வெகுநாள் வரையிலும், கிடைத்துக்கொண்டிருக்கக் கூடியதாகவிராத இடங்களில் தெளிப்பையே கையாகின்றனர்.

எத்தனை நாளில் நாற்றைப்பிடுங்கி நடவேண்டும்:—

நாற்றுப் பாவியிருக்கும் நெல் வகையின் மொத்தவயதைக் கணக்கிட்டு ஒருமாத வயதிற்கு ஒரு வாரத்திற்குமேல் நாற்றங்காலில் நாற்றை வளரவிடக்கூடாது.

உதாரணமாக 6 மாதத்திற்குள் பலனுக்குவரும் வகை நெல்லை 42 நாள்களுக்குள் பிடுங்கி நடவேண்டும். நெருக்கமாக விடப்பட்ட நாற்றானால் கொஞ்சம் தாமதமாக நடலாம். தெளிவாக விடப்பட்ட நாற்றுகள் சிறிது சீக்கிரத்தில நடவேண்டும்.

நடவு.

நாற்றங்காலின் மிருதுவான மண்ணினின்றும் நாற்றுகளைப் பிடுங்கி, வேர்களில் படிந்திருக்கும் மண்ணைக்கழுவினபிறகு

நாற்றுகளை ஓர் பிடியில் அடங்கும்படியான சிறுகட்டுகளாக கட்டுவார்கள். இவைகளை நடும் வயலில்கொண்டுபோய் சேர்ப்பார்கள் இவைகள் வாடாமலிருக்கும்படி தண்ணீரில் நாற்றுமுடிகளை அடிப்பாகம் நனையும்படி வைப்பார்கள். வழக்கமாய் பெண்டுகளே நாற்றுகளை நடுகின்றனர் ஒருத்தி, நட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு நாற்று முடிகளை நிரந்து எடுத்துப்போடுவாள். ஒவ்வொருத்தியும் தன்கையில் ஒருமுடியை எடுத்துக்கொண்டு அதனின்று ஒன்று, இரண்டு அல்லது மூன்று நாற்றுகளைபோயுருவி அவைகளைச் சேற்றில் நடுவாள். மண்ணிற்குள் வேர்கள் புதையும்படி ஆழ்ந்த நட்டுவாயை மூடவேண்டும். ஒரு ஏகர் நிலத்தில் நடவு முடிக்க சுமார் 12 ஆட்கள் பிடிக்கும். நாற்றுகளை காற்றடிக்கும் திக்கை நோக்கி சிறிது சாய்த்து நடுவார்கள்.

ஒற்றை நாற்று நடுகை.

அநேக ஜில்லாக்களில் பத்து முதல் முப்பது நாற்றுகளை ஒன்றாய்ச்சேர்த்து நடுவதை நாம் காண்கிறோம். அப்படி நட்டவயலிலுள்ள பயிர் விளைவானவுடன் அதில் ஒரு நடுகையைப் பிடுங்கி பரிசோதிப்போமானால் அதில் அநேக நாற்றுகள் பலித்துப் பெருகமார்க்க மின்றிப்போய்விட்டதையும் அப்படிப் பலித்துப் பெருகி கதிர்வாங்கின நாற்றும் நன்றாய் ஓங்கிவளரப் போதுமான இடமின்றி நெருக்குண்டிருப்பதையும் அவைகளின் வேர்கள் சடைபின்னலடைந்திருப்பதையும் தானியமணிகள் பருக்காமலும் கதிர்கள் சிறிதாயிருப்பதையும் காணலாம்.

எங்கெங்கே கிருஷிகர் பரீக்ஷார்த்தமாய் ஒற்றை நெல்நாற்று நடுகை நடத்தி வருகிறார்களோ அங்கெல்லாம் கும்பல் கும்பலாய் நடுவதைப் பார்க்கிலும் ஒற்றை நெல் நாற்று நடுவது சிலாக்கியமானதென்று அவர்கள் அதிசீக்கிரத்தில் கண்டுபிடித்து அதைக் கையாடி வருகிறார்கள். ஒற்றைநெல் நாற்று, நட்டபயிர் நட்டவுடனே அதிகக் கலப்பாகவும் கேவலமாயும் காணப்படுகிறபடியால் அநேக ஜனங்கள் அப்படி நடப்பில் எப்படியாகுமோவென்ற பயத்துடன் ஆலசியம் செய்கிறார்கள். என்றாலும் இப்படி பார்வைக்கும் கேவலம்போல் தோற்றிய பயிரின் ஸ்திதி வெகு சீக்கிரத்தில் மாறி மேன்மையடையும். இப்படிநட்ட ஒவ்வொரு அலகுக்கும் வேர்கள் கிளைத்து நன்றாய் பாவுகிறதற்கு திட்டமான விஸ்தீரணம் இருப்பதால் அந்தப் பயிர் நன்றாய் மூடுகட்டி பக்கம் வைத்து (பக்கங்களில் கிளைத்து) வளர்ந்துவரும். அப்படி மூடுகட்டிக் கிளைப்பதிலும் பலனுக்கு வரக்கூடிய எத்தனை

பக்கத்தாள்களை அத்தனைதாள் உண்டாகும். இப்படி நட்ட பயிர் விளைக்கு வந்தபின் பார்ப்பதாலேயே ஒற்றைகால் நாற்று நடுகை வெகு விசேஷமானதென்று தெளிவாய்த்தெரியும். அதின் கதிர்க்குலைகள் நீளமாயும் தாக்காயுமிருப்பதுடன் தான்யமணிகள் பருமனாயுமிருக்கும்.

ஒற்றை நாற்று நடுவதாலுண்டாகும் அனுகூலங்களில் அடியிற்கண்ட விஷயங்கள் கவனிக்கத்தக்கவைகளாயிருக்கின்றன:—

1. நாற்றுவிட ஜாஸ்தியான விதை வேண்டியதில்லை.

2. நாற்றங்காலில் நாற்றைப்பிடுங்கி முடிமுடியாய்க் கட்டும் செலவும் அப்படிக்கட்டிய முடிகளை நாற்றங்காலிலிருந்து நடுமிடத்திற்குக் கொண்டுபோகும் கூலியும், பிரயாசையும் குறைவாகிறது.

3. களை பறிப்பு இதனால் லகுவாகிறது; ஏனெனில் நாம் சாதாரணமாய் குத்து குத்தாய் நடுகிற நெல்பயிரில் காண்கிற கெட்ட களைகள் மேற்சொன்னபடி ஒவ்வொன்றாய் நடும் பயிர்களோடு கலந்து நட இடமில்லையாகையால் கெட்ட களைகள் இதிலுண்டாக இடமிராது.

4. தண்ணீர் வயலில் சுலபமாய் பாயும் இக் காரணத்தைப் பற்றி "ஊறை" "நெல்சக்களத்தி" "வேப்பம்பாசி" முதலிய களைகளை பாவவிடாமல் சுலபமாய்த் தடுக்கமுடியும்.

5. நாற்றங்காலில் விதையை குறைத்து பாவுகிறதினால் அதில் முளைக்கும் நாற்று திடமாயும் காத்திரமாயுமிருக்கிறது. சாதாரணமாய் நடுகை காலங்களில் பெய்யும் மழைகளால் வயல்களில் தண்ணீர் கட்டினாலுங்கூட, நட்ட நாற்று திடமானவைகளானதால் அழுகிக் கெட்டுப்போகாமல், தண்ணீர் பெருக்கைத் தாங்கும் சக்தியுடையவைகளாயிருக்கின்றன.

6. தண்ணீர் தட்டுண்டாகும் சமயங்களில் இப்படி நட்ட பயிர் வாட்டங்கொடுக்காமல் ஜாஸ்திநாட்களுக்கு காய்ச்சல் தாங்குகிறது.

7. ஒற்றை முதலாய் நட்ட பயிர்கள் மற்றப்படி நட்ட பயிர்களைவிட வீரியமாய் இருப்பதுடன் நோய்நொடிகளால் அவ்வளவு ஜாஸ்தியாய் பீடிக்கப்படமாட்டாது.

8. ஒற்றை முதலாய் நட்டபயிரில் தானியங்கள் ஒரே நிதானமாய் முற்றி, பதர் ஜாஸ்தியில்லாத தானியங்களாயிருப்பதால் ஜாஸ்தி கண்டுமுதல் கிடைக்கும்.

9. இப்படி நடப்பட்ட பயிரில் கலவனிராது. ஏனெனில் வயலில் அறுவடைசெய்யும்போதே வேறு நிறப்பயிர் ஊடே கலந்திருந்தாலும் அந்த வித்தியாசம் நன்றாய்த்தெரியும். ஆகை

யால் அந்தக் கலவன் மூடிகளை நீக்கி நமக்குவேண்டிய நெல் தினுசையே அறுவடைசெய்து கலவனில்லாத நெல்விதைகளையச் சேகரித்துக்கொள்ளக்கூடும். குத்து குத்தாய் நட்டபயிரில் கலவனிருந்தால் எளிதில் தெரியாது. அப்படி குத்தாய் நட்ட ஒரு நடுகையில் ஒரு தினுசு நாற்றின் ஊடே மற்றொரு தினுசு நாற்றொன்று சேர்ந்திருக்கக்கூடும். அது விளைவிக்கு வரும்பொழுது கலவன் பயிர் நன்றாய்த்தெரியாது. அந்த கதிர் தாளைமட்டும் விலக்கி மற்றத்தாள்களை அறுவடைசெய்வது சாத்தியமாகாது.

மேலும் கிருஷிகர் கொஞ்சம் கொஞ்சம் சிரத்தை எடுக்கும் பக்ஷத்தில் தங்கள் வயல்களில் பயிர்வளரும் காலத்திலேயே எந்த மூடிகள் மற்றவைகளைவிட வளப்பாயும் சிலாக்கியமாகவும் உண்டாகிறதென்று கவனித்து குலைத்தாக்கும் பருமணி நெல்லும் உள்ளவைகளைத் தெரிந்தெடுத்து அவைகளை வேறாய் அறுவடை செய்து அந்த நெல்லை மறுவருஷத்தின் விதைக்காக வைத்துக் கொள்ளக்கூடும். இவ்விதமாக ஒரு தினுசு விதையை சிலாக்கியமான ஸ்திதிக்கு விர்த்தி செய்யக்கூடும்.

எவ்வளவு இடைவிட்டு நடுகை போடவேணுமென்பதை கிருஷிகர் தாங்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. நீர்வடிவும் நிலவளமும் பொருந்திய கொழுத்த நிலங்களில் நடுகை கலப்பாகவும் நீர்வடிய இடமில்லாமலிருக்கிற சாரமற்ற நிலங்களில் அதைவிட நெருக்கமாயும் நடவேண்டிவரும். ஆகையால் நடுகையின் கலப்பும் நெருக்கமும் கிருஷிகரின் அனுபோகத்தைப் பொறுத்திருக்கிறது. இதைப்பற்றிச் சந்தேகம் ஏதேனும் அவர்களுக்கு ஏற்படும் விஷயத்தில் ஒரு வயலை சிறு தளைகளாகப் பிரித்து ஒன்றில் 4 அங்குலம் இடைவிட்டும் மற்றொன்றில் 6 அங்குலம் இடைவிட்டும் இப்படியே 8 அங்குலம் 10 அங்குலம் இடைவிட்டு வெவ்வேறு தளைகளில் நட்டு பரிசோதனைசெய்து. எந்த நிலங்களுக்கு எவ்வளவு இடைவிட்டு நட்டால் அதிசிலாக்கியமாயிருக்கும் என்று கண்டுகொள்ளலாம் என்றாலும், அடியில் குறிப்பிடும் அளவுகள் சற்றேறக்குறைய பொருந்தும். ஏகரா ஒன்றுக்கு ஆயிரம் பட்டணம் படிக்குமேல் மாகூல் கொடுக்கும் நிலங்களில் சாணுக்கு ஒரு நடுகையும் ஏகரா ஒன்றுக்கு 750 பட்டணம்படி மாகூல் கிடைக்கும்

டிசம்பர் 19, 26உ }
இந்துநேசன்

G கிருஷ்ணமூர்த்தி.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. C. R, Lakshmivaraha Ayyangar, B. A. B. L., and Mr. R, Srinivasa Ayyangar, B. A. for The Agricultural Association, No. 5. Cutchery Road, Kumbakonam.